

# நாவேந்தன்



அக்டோபர் 1969

சத்தியத்தின் திருவுருவாய்,
காலத்தை வென்று நிலைக்கும்,
காந்தீயம் வளர்த்துப்......



பாரத தேசந்தன்னை
வாழ்வித்த அண்ணல் காந்திஜீ.

★ இலக்கியத் திங்கள் இதழ் - விலை சதம் 25 ★

மலர் 1 அக்டோபர்

இதழ் 2 1969



# அன்பார்ந்த வாசகரே!

நாவேந்தன் இரண்டாவது இதழ் அக்டோபர் பத்தாம் நாள் உங்கள் கைகளில் சமர்ப்பிக்கப்படுகிறது. அதற்குள்ளாகவே 'ஏன் இந்தத் தாமதம்'? என்று நேரிலும், கடித மூலமும் பல நேயர்கள் 'நலம்' விசாரிக்கத் தவறவில்லை! ஆடம்பரமும், படோடபமும் மிக்க (பத்திரிகை) உலகில் ''நாவேந்தன்'' எளிமையாக, தெளிந்த ஞானியின் அமைதி, அடக்கத்துடன் வெளிவருவது குறித்துப் பல்தரப்பட்ட கருத்துக்களை வாசகநேயர்களாகிய உங்கள் குரல்கள் எதிரொலித்துள்ளன. எனது சக்திக்கு அப்பாற்படாத வகையில் பத்திரிகையைச் சகல துறைகளிலும் வனப்புள்ளதாக்க வேண்டுமென்ற பேராசை என்னுள் கொழுந்துவிட்டெரியவே செய்கிறது ஆனால் வெறும் மேனி மினுக்கில் அகவொழுக்கத்தைத் துச்சமென மதிக்கும் 'விலை மகளிரின்' தோற்றத்திற்கு எனது பத்திரிகை அடியெடுத்து வைக்காது. அன்றியும், தனி மனிதன் மீது ஏற்படும் பகையுணர்ச்சிக்கு உரைகல்லாகத்தமக்குள்ள அரசியல், இலக்கிய சார்புக்களை இப்பத்திரிகையின் மீதும், என் மீதும் திசைதிருப்பி விடுபவர்களுடன் சமராடுவதிலும் காலத்தை விரயஞ் செய்யப் போவதில்லை!

ஈழத்தில் தரமான இலக்கியப் பத்திரிகை நடாத்துவதென்பது ஒரு இலட்சியப் பயணம். அந்தப் பயணத்தில் துணிந்து அடியெடுத்து வைத்துள்ள 'நாவேந்தன்' தொடர்ந்து முன்னேறிச் செல்வான். நாளடைவில் 'அவனது' இலக்கியப் பணியைத் தமிழுலகு நன்கு விமர்சிக்கட்டும்! தரமான எழுத்தாளர்கள் தொடர்ந்து எழுதுவார்கள். படைப்புகளின் தரமே முக்கியமானது தவிர எழுதுபவர்கள் யாரென்பதல்ல. இக்குறிக்கோளுடன் எல்லா இலக்கியப் படைப்பாளிகளையும் எம்மோடு ஒத்துழைக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன். வாசகர்கள் ஒவ்வொருவரும் இலக்கிய ஆர்வமுள்ள சகலருக்கும் நாவேந்தனை அறிமுகப்படுத்துமாறு வேண்டுகிறேன். அடுத்த இதழ் முற்றிலும் புதிய அமைப்பில், கவர்ச்சிகரமானதாகவும், கையடக்கமானதாகவும், நிறைய விஷய அடக்கமுள்ளதாகவும் வெளிவர முயற்சி செய்து கொண்டிருக்கின்றேன்,

இந்த இதழில். சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றுள்ள கவிஞர் காரை, செ. சுந்தரம்பிள்ளை, மற்றும் பிரபலமான கே. எஸ். ஆனந்தன், விஜயேந்திரன், மேகநாதன் ஆகியோரது படைப்புக்களுடன், எனது வழக்கமான பகுதிகளடங்கிய எழுத்தும் உண்டு. படித்தபின் உங்கள் எண்ணங்களை எழுதுங்கள்.

அன்பன்
நாவேந்தன்

## வாழ்த்துகிறோம்!

○ இந்த ஆண்டில் இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றுள்ள கவிஞர். காரை செ. சுந்தரம்பிள்ளை ஜனாப் எம். எம். ஷரிபுதீன், நவாலியூர் நா. செல்லத்துரை, ஜே. ஜூலியஸ் இராசையா ஆகியோருக்கு ''நாவேந்தன்'' இலக்கியத் திங்கள் இதழ் மூலம் எனது பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் மிக்க மகிழ்வுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

— நாவேந்தன் —

**சர்வதேசியம்:**

## ஹோ - சி - மின்!

வடவியட்னாம் ஜனாதிபதி தலைவர் ஹோ-சி-மின்னின் இழப்பினால் கம்யூனிஸ அகிலம் பெரிய அதிர்ச்சிக்காளாகியுள்ளது! தென்கிழக்காசியாவிலுள்ள தலைசிறந்த கம்யூனிஸத் தலைவர்களில் ஒருவர் ஹோ-சி-மின்! புரட்சிகரதத்துவத்தை ஏற்றுக்கொண்டு அதனைச் செயல்படுத்திய ஹோ-சி-மின் வாழ்க்கையே அனல் தெறிக்கும் புரட்சிகர வாழ்க்கையாகும். மிக எளிய வறிய குடும்பத்தில் பிறந்து, மிகக் கடூரமான வாழ்க்கை அனுபவங்களுக்கூடாக முன்னேறி, ஏகாதிபத்தியத்தையும், முதலாளித்துவத்தையும் முறியடித்த மாபெரும் தலைவர் ஹோ-சி-மின் என்பதில் ஐயமே இல்லை புரட்சிகர வழிகாட்டியும், ஜனாதிபதியும், விடுதலைப் போராட்ட வீரராகவும் விளங்கிய ஹோ-சி-மின் தலைசிறந்த ராஜதந்திரியுமாவர். சீனா, ரஷ்ய சித்தாந்த மோதலில் 'தலையைக்' கொடுக்காது நடுவழியைக் கையாண்டு இருபகுதியினரிடமும் இருந்து வியட்நாம் விடுதலைப் போருக்குத் தளபாடங்களையும், வடவியட்நாம் நல்வாழ்வுக்கு ஏற்ற பொருளாதார உதவிகளையும் பெற்றுக்கொண்ட, அவர் மகத்தான மனிதர் தாம்! ஏறக்குறைய எண்பது வயதுவரை வியட்நாமிய மக்களுக்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்ட அவர், இறுதிவரை எளிய வாழ்க்கை வாழ்ந்து மக்கள் மனத்தில் உலகளாவிய அளவுக்கு நீங்காஇடம் பெற்றுவிட்டார். சர்வதேசக் கம்யூனிஸ வரலாற்றில் என்றும் அவருக்கு நிலையான இடமுண்டு.

★

## ஆமதாபாத்!

காந்தி நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடும் இக்காலசட்டத்தில், காந்தியடிகளாரின் பிறப்பிடமான குஜராத் மாநிலத்தில் மகா பயங்கரமான இனக்கலவரம் நடைபெறுவது கண்டு நாகரிக உலகமே தலைகுனிகிறது. இந்த இனக்கலவரத்தை வைத்துக்கொண்டு யுத்தவெறிபடைத்த இஸ்ரேல் போன்ற 'சுண்டைக்காய்' நாடுகள் இந்தியாவின் புனிதமான சனநாயக அரசியலுக்கே 'களங்கம்' கற்பிக்க முனைவதைக் காண எமக்கு மேலும் துயரமுண்டாகின்றது. ஆமதாபாத்!-அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாக்காலத்துக்கு ஒரு அவமானச் சின்னமாகிவிட்டது! இன, மத, மொழியின் பேரால் இத்தகைய கலவரங்களை எந்த அரசும் அனுமதிக்கவே கூடாது! கடூரமாக இத்தகைய கலவரங்களை ஒடுக்கிவிடவேண்டும் உலகம் முழுமையும் தார்மீக உபதேசஞ் செய்யமுன் இந்திய அரசு தனது மாநிலங்களில் அவமானமுண்டாக்கும் ஆமதாபாத் அட்டூழியங்களை வேரோடுகளைந்தெறிந்திடல் வேண்டும்!

★

## கபார்கான்!

காந்திஜீயின் பிரபலமான சீடர்களில் ஒருவர் கபார்கான். 'எல்லைப்புறக்காந்தி' என அனைத்திந்திய மக்களாலும், முஸ்லிம் மக்களாலும் அன்புடன் அழைக்கப்படுபவர் இன்று எண்பதுவயதினை எய்திவிட்டார். முப்பது ஆண்டுகள் ஏகாதிபத்திய, இனவாத சக்திகளை எதிர்த்துச் சிறைவாசஞ் செய்தவர். இந்திய சுதந்திரத்தின் பின்னர், இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் காந்திஜீ நூற்றாண்டு விழா வைபவங்களில்கலந்துகொள்ள, தமது பிறப்பிடமான ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர், மூன்றுநாள் உண்ணாவிரதம் மேற்கொண்டு இந்தியாவில் நிகழும் இன, மத, மொழிக் கலவரங்களுக்குத் தமது ஆத்மீக ரீதியான எதிர்ப்பை எடுத்துக்காட்டியுள்ளார். உண்மையான காந்தீய தத்துவத்தின் பிரதிவிம்பமாகத் திகழும் கபார்கான் போன்றவர்களிடமிருந்து முழு உலகமுமே தெரிந்துகொள்ளவேண்டிய விடயங்கள் மிகப் பலவுள. அனைத்துலகத் தலைவர்களும் கபார்கான் போன்றவர்களின் சிந்தனை, செயல்களின்மூலம் மனித சமுதாயத்திற்கு நன்மைபுரியும் மார்க்கங்களைத் தெரிந்து கொள்வார்களாக!

★

—''மேகநாதன்''

## மா - சே - துங், லின் - பியோ

சீனத்தலைவர் மாசேதுங்கும், அவரின் வாரிசாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள லின்-பியோவும்பற்றி அண்மையில் 'சனநாயக – முதலாளித்துவ உலகில பரபரப்பான செய்திகள் உலவின. தலைவர் மா-சே-துங் காலமாகிவிட்டதாகவும் அல்லது படுமோசமான பாரிசவாத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும், லின்–பியோ சுவாசப் புற்றுநோயினால் மரணத்தை அண்மிக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் பரப்பப்பட்டன. இலங்கையிலும் இச் செய்திகள் 'தேசிய தினசரிகளில்' முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டன. ஆனால் உண்மை என்ன? அக்டோபர் முதலாம் நாளில், மக்கள் சீனக் குடியரசின் இருபதாவது பூர்த்தி விழாவைக் கொண்டாடும் வைபவத்தில் சீனத் தலைநகர் பீகிங்கில் தலைவர் மாவோவும், அவரது வாரிசான லின்பியோவும் லட்சக்கணக்கான மக்கள் முன் தோன்றி வீரவுரைகளாற்றியுள்ளனர். முதலாளித்துவத்தின் முடைநாற்றமெடுக்கும் அப்பட்டமான பொய்யிருள் சீனச் செஞ்சுடரின் முன் சின்னபின்னமாகச் சிதைந்தொழிந்தது 'சனநாயக, சோஷலிச, தனிமனிதசுதந்திர ஏடுகள்' இனியாவது உண்மைச் செய்திகளை வெளியிடத் துணிவு கொள்ள வேண்டும்.

—''மேகநாதன்''

# வாசகர் கடிதங்கள்!

ஐயா,

தங்கள் மலரகத்திலிருந்து இலக்கியத் திங்கள் இதழ் ''நாவேந்தன்'' வெளிவருவது காலமெலாம் ஒரு சிறந்த தமிழ் இலக்கியத் திங்கள் இதழ் ஈழத்தில் இல்லையே என்று கண்கலங்கிய எம்மை உச்சி குளிர வைத்தது. நாவேந்தன் நறு மணத்தேனாகவும் இலக்கியத் துறைக்கு முன்னோடியாகவும் ஈழத் தமிழர் வாழ்வில் ஒளி விளக்காகவும் திகழ வேண்டுமென்றும் ஈழத்தில் இலை மறை காயாக இருக்கும் தலை சிறந்த எழுத்தாளர் எல்லாம் இலக்கிய அரங்கில் அறிமுகம் செய்து ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டுமென்றும், அறிவுச் சுடர் என்னும் பொற்கிரணங்களைப் பரப்பி இலக்கிய வாழ்வு என்ற திசையில் உதிக்க வேண்டுமென்றும் அவனை மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன், வரவேற்கிறேன்!

பொ. பூபாலசிங்கம்
அகலவத்தை,
25-9-69

★

''.........கலை இலக்கியக் கருத்துக்களை உள்ளடக்கியதாக திங்கள் தோறும் மலரும் ''நாவேந்தன்'' ஈழத்து இலக்கிய உலகில் ஒரு நிரந்தர இடத்தை வகிக்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்!

ஊரெழு. அ. கனகசூரியர்
10-9-69

''நாவேந்தனைப் படித்தேன். சுவைத்தேன்-மகிழ்ந்தேன். வாழ்க நாவேந்தன் வளர்க நாவேந்தன்! விலை, பக்கம், அமைப்பு தொடர்ந்திருக்கவேண்டியவை!

வித்துவான் -
க. கணபதிப்பிள்ளை பீ. ஏ.
இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
9-9 69

★

''நாவேந்தன்'' இதழ் ஒன்றை வாங்கிக் கண்ணோட்டமிட்டேன். பார்த்து முடிந்ததும், சந்தா அனுப்பத் தீர்மானித்தேன். பல்சுவைத் துணுக்குகள், பூச்சரங்கள், சிந்தனைத் துளிகள், சிறுகதை என்பன மிகவும் கவர்ச்சியாக அமைந்துள்ளன. 'நாவேந்தன்' இன, மத, அரசியல் சார்பற்ற பத்திரிகை என்பதற்கு அரசியல் தலைவர்களின் மேற்கோள்கள் சான்ருக அமைந்துள்ளன. நாவேந்தன் இன்னும் புதிய பல அம்சங்களை தாங்கி அழகிய திங்கள் இதழாக வெளிவருமென்பதில் ஐயமில்லை உங்களது இலக்கியப் பணிக்கு எனது முழு ஆதரவையும் நவில்கின்றேன்.

சி. க. கௌரிபாலன்
ஏழாலை மேற்கு,
சுன்னுகம்.
5-9-69

❃ கட்டுரையாளர் தமிழ் உரை நடையும் அதன் வளர்ச்சியும் பற்றித் தமது நோக்கில் சுவையாக ஆராய்கிறார். அவரது கருத்துக் களும் பத்திரிகையின் கருத்தும் ஒன்றானவையே என்ற மயக்கம் வாசகர்களுக்கு ஏற்பட வேண்டியதில்லை. — ஆசிரியர்

# தமிழ் உரை நடையும், அதன் வளர்ச்சியும்

''இலக்கியத்தில் வசனத்திற்கு ஒரு ஸ்தானம் இருக்கவேண்டுமா என்று பலர் நினைக்கலாம், ஏனெனில் தமிழுக்கு வசன இலக்கியம் புதுச்சரக்கு. இதனால் வசனத்தில் என்ன அழகிருக்கிறது? தினம் தினம் பேசுவதுதானே; என்று நினைக்கலாம். கற்பனா சக்தியும், உணர்ச்சியின் உத்வேகமும் நிறைந்த ஒரு வசனகர்த்தனிடம் வசனம் அற்புதமாக வளைந்து கொடுக்கும்.''

மேற்கண்டவாறு கூறியவர், தமிழ் உரைநடைக்கு உயிரூட்டியவர்களில் ஒருவரான புதுமைப்பித்தன் ஆவார். அவர் கூற்று வசனத்தின் இலக்கிய அந்தஸ்தையும், 'கற்பனா சக்தியும், உணர்ச்சியின் உத்வேகமும் நிறைந்த ஒரு வசனகர்த்தனிடம் வசனம் அற்புதமாக வளைந்து கொடுக்கின்ற மேம்பாட்டினையும் தெளிவுறப் பேசுகிறது.

சிருஷ்டி ஆற்றலும், சிந்தனை விரிவும் துலங்கக் கூடிய முறையிற் பேனா பிடிப்பவனே உண்மையான எழுத்தாளனாவான். அத்தகைய எழுத்தாளர்களாலேயே காலத்திற்குச் சவால் விட்டு நிற்கக்கூடிய உன்னத இலக்கியங்களைப் படைக்க முடியும். துரதிருஷ்டவசமாக இந்நாட்களில் தமிழ் கூறும் நல்லுலகின்கண் வாழ்வோரில் சுய சிந்தனை' தமக்கென அமைந்த மொழி நடை இவை போன்ற இலட்சணங்கள் அணுவளவேனும் இல்லாத பல மண்டூகங்கள் எழுத்தாளப் போர்வையிற் திரிவதைப் பார்க்கின்றோம்.

''அரைத்த மாவையே அரைக்கின்ற பாணியில் மீட்டும் மீட்டும் ஒரே விதமான மொழி நடையை, சொற்பிரயோகத்தை' பொருளைக் கையாளுகின்ற

## விஜயேந்திரன்

நிலை நீங்காதவரை நிச்சயமாக எம்மிடத்து நல்ல எழுத்தாளர்கள்தோன்றவே முடியாது.

சிறுகதைகளாகட்டும், அல்லது நாவல், நாடகம், கட்டுரை எதுவாகத்தானிருக்கட்டும், இந்த,இந்தத் துறைகளிற் புரட்சியையோ, பெருந் திருப்பத்தையோ தரக் கூடிய முறையிற் தமிழைக் கையாண்டவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

எந்த ஒரு எழுத்தாளனும் பேனாவைத் தூக்கும் முன்னர் தான் எழுதப் போகும் விஷயத்தை எவ்வண்ணஞ் சொன்னால் நன்றாக இருக்கும் என்பதனை ஆழமாக எண்ணிப் பார்க்க வேண்டும். பொருள்தான் புளித்துப் போனதாக இருப்பினும் அவற்றை லலிதமான நடையிற் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். அத்தகைய 'நடை ஆற்றல்' தானும் இல்லாவிட்டால் அவனென்ன எழுத்தாளன்?

இதோ! ''நல்ல நடையின் இலக்கணத்தை அறிஞர் தி. ஜ. ர. அழகாகச் சொல்கின்றார்.''

''இலக்கியத்திலே நடை என்பது தராதரத்தை அநுசரித்த ஒரு சம்பவம். அந்தத் தராதரத்தை மீறி விடுமானால், நடை ரஸங் கெட்டுப்போவது மாத்திரம் அல்ல, சொல்ல வந்த பொருளுங்கூடக் கெட்டுவிடும் நடையும் பொருளும், உயிரும் உடலும் போன்றவை. நடை என்பது சொற்களை அம்மானையாடுஞ் செப்பிடு வித்தையல்ல; ஜன்னி பிடித்த உளறல் அல்ல, பானையிலே புளியை அடைப்பதுபோல் வசனத்தில் வார்த்தைகளைத் திணிக்கும் வித்தையும் அல்ல. நடை என்பது, கருத்தோடு கூடப் பிறக்கும் பிறப்பு. இவை உணர்ச்சியிலே ஊறும் அருவி நீரோட்டம்.''

(தொடர்ச்சி 6 ம் பக்கம்)

O பிரபலம் பெற்று விளங்கும் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களது ''புதுமையான மனிதர்கள்!'' எனும் இக் கவிதை தமிழ் மக்கள் மட்டுமல்ல, தமிழ்த்தலைவர்களுமே படித்துப் பயனுற வேண்டிய ஒரு படைப்பாகும்!

—ஆசிரியர்

# "புதுமையான மனிதர்கள்"

கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை

செந்தமிட் தொண்டு செய்வதாய்க் கூறிச்
சிறக டித்துத் திரிந்திடு வோர்கள்
சொந்த மாய்த் தமிழ் ஆய்கிற பேர்க்குத்
தொல்லை கள்தரு கின்றதில் வீரர்
எந்தக் காரியமும் தம்மை யன்றி
எவருஞ் செய்திட மாட்டார்கள் என்பர்
தந்தை வீட்டு முதுசொம் என்றெண்ணித்
தமிழை மற்றவர் ஆயிற் பொறுக்கார்!

★

துண்டு துண்டாக வெட்டிய போதும்
தூய செந்தமி ழைக்கை விடோம்யாம்
என்று மேடையில் ஏறி முழங்கும்
எம்மவர் வீட்டில் பேசுவ தெல்லாம்
அந்நியர் தந்த ''மம்மி, டடி'' தான்
''அய்போ வானும்'' அரும்பிட லாச்சு!
என்ன செய்குவோம் எந்தமி ழர்க்கு
இன்னும் ரோசம் பிறந்திட வில்லை!

★

நாம் உரைப்பது தான்சரி யென்று
நாவு ஊந்திட வாதம் புரியும்
கூன்வி ழுந்த தமிழர்கள் நாங்கள்
குற்றம் காண்பதில் மட்டும் நிபுணர்
ஏன் எதுக் கென்ற கேள்வியி லாது
இன்றும் செம்மறி யாடுகள் போல
சாண்வ யிற்றை நிரப்புதற் காகத்
தாளம் போட்டுத் திரிவது நன்றோ?

★

பூனை யொன்று குறுக்கேவந் திட்டால்
போச்சுதே போகும் காரியம் என்று
வீணிலே வீடு மீண்டும் திரும்பும்
விந்தை யான தமிழ்ப்பெரும் மக்கள்
ஞான முள்ள மனிதர்தம் சொல்லை
நாளும் கேட்டு நடந்திட மாட்டார்
போன காலப் பெருமையில் வாழும்
புதுமை யான மனிதர்கள் உண்மை!

அறிஞர் தி. ஐ. ர. வின் கருத்து, பொருளற்ற வெறுஞ் சொற்களை வைத்துக் கொண்டு மேடைப் பேச்சுப் பாணியில் கதைகள், நாவல்கள் எழுதிக் குவித்த எழுத்து வேந்தர்களுக்கும், சிந்தனைத் தெளிவும், மொழி ஆளுகையுங் கைவராத நிலையில் 'வசன வாந்தி' எடுக்கும் எழுத்துக்காரர்களுக்கும் மிகவும் பயன்தரக் கூடிய, பயன்தர வேண்டிய சிந்தனையாகும்.

தமிழுக்கு வசனமே புதிது. ஆனபடியால் அது வளர்ச்சியின் எல்லையைத் தொட்டு விட்டதென உரைத்தற்கில்லை. எனினும் 'பெருமைப்படத் தக்க' வளர்ச்சியைத் தமிழ் வசனம் பெற்றுத்தான் இருக்கிறது.

'தமிழ் உரைநடைத் தந்தை' என்று அறிஞர்களாற் சுட்டிக் காட்டப்படுகின்ற ஆறுமுகநாவலரின் வசன நடையை, அவர் காலத்துச் செய்யுள் ஆட்சி நிலைப் பின்னணியிற் பார்க்கும்பொழுது நாவலர் நடை ஆச்சர்யமான ஆனந்தத்தையே தருகிறது நாவலருடைய தமிழ் நடையில் இன்றைய பண்டிதர்கள் எவரிடத்திலும் காணக் கிடைக்காத வேகத்தையும் வலிமை மிக்க வார்த்தைகளின் பிரயோகத்தையும் காணக்கூடியதாயிருக்கிறது. அதே வேளையில் நாவலர் காலத்தவரான இராமலிங்க சுவாமிகளின் உரைநடையும் பொருளமைதி சொற்செறிவு சரளம் போன்ற பண்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கிற்று.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

★ குறுகிய காலத்தில் பரந்த அளவுக்கு வாசகர்களைக் கவர்ந்துகொண்ட சிறந்த சிறுகதை, நாவலாசிரியர் கே. எஸ். ஆனந்தன். அகத்துறை உணர்வுகளை மட்டும் அடிநாதமாகக் கொண்டு புனையப்பட்ட அருமையான ஒரு சிறுகதை......!

# உறவுக்கப்பால்.....!

உள்ளத்தினுள்ளே ஓர் உலகமே புரண்டு விழுந்து சிரித்துக் கொண்டிருப்பது போன்று — பெருகி வரும் சிரிப்பை விழிகளில் தேக்கி மெதுவாக வடிகாலில் விடுவது போன்று புன்னகை பூத்தவாறு அவளைப் பார்த்தான் கணேஷ்.

கீழ்வானம் வெளிறிக் கதிரவனின் செங்கிரணங்கள் தெறித்துக் கண்களைக் கூசச் செய்வது போன்று, பெண்மையின் ஆவேச உணர்வுகள் அத்தனையும் ஒன்று சேர்ந்து கதிர்களாகி அவள் முகவானில் தெறித்து ஜொலித்தன. பனியில் நனைந்த முள்முருக்கம் பூவிதழ்போல அவள் அதரங்கள் எதையோ சொல்லத் துடித்தன. ஆனால் வார்த்தைகள் தொண்டை வரை வந்து அதற்குமேல் வெளிவர மறுக்கின்றதே. அதற்குக் காரணம் அவனுடைய அந்தச் சிரிப்பு! அதில் தான் எத்தனை கவர்ச்சி! கபடமற்ற திருப்தியின் மகிழ்ச்சி!

அவன் பேசுவது குறைவு. பேசினாலும் அந்தப்பேச்சு, பொருள் புரியாத குழந்தையின் மழலை. அவன் பேசுவதை விடச் சிரிப்பதுதான் அதிகம். அவனுடைய சிரிப்பே பேச்சாகவும்; பேச்சே சிரிப்பாகவும், சங்கமமான ஒரு கவர்ச்சிப்பாஷை. அத்துடன் நின்றால் போதாதா? புன்னகை தவழும் முகவிலாசத்தில் அளவோடு கத்தரித்த அழகான மீசை, ஆண்மைக்கே ஒரு எடுப்பான தோற்றம். அதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல ஜொலிக்கும் சுடர்விழிகள். அவை இமையாநாட்டம் கொண்டு செந்

**கே. எஸ். ஆனந்தன்**

தழல் போல சிவந்திருக்கும். வெம்மை இராது — அருளின் முழுமை நிறைந்திருக்கும்; அவற்றை ஏறிட்டு நோக்குபவரை தம்மோடு ஐக்கியப் படுத்தும் தன்மையிருக்கும். அந்த விழிகளை அடிக்கடி பார்த்தே அவள் தன்னை இழந்தாள். கோபம் வரும்போதெல்லாம் குமுறும் எரிமலையாய் துடிப்பாள்; தணலாக வார்த்தைகளை அள்ளி வீசத் துடிப்பாள். அவனுடைய புன்னகைப் பனிமலையில் அவள் ஆவேசம் அவிந்து விடும். பேசும் சக்தியற்ற பதுமையாகித் தலைகுனிவாள். ஆனால் அன்று துணிந்து கேட்டாள் ''கணேஷ் உங்கள் முடிவை மாற்றவே முடியாதா?'' ''சொன்னால் சொன்னதுதான். மாற்றிப் பேசும் பழக்கம் என்னிடம் கிடையாது.''

சிவந்து துடிக்கும் உதட்டைக் கடித்தவண்ணம் அவன் விழிகளை நோக்கினாள். சலனமற்று தெளிந்து விளங்கும் அந்த முகத்தில் உள்ள சிறு விழி வழியே பார்த்தால் அவன் இதயத்தினுள்ளே புழுங்கி குமைந்து கொண்டிருக்கும் நினைவுகள் எல்லாம்தெரிந்து விடுமா என்ன?

பொங்கிப் பெருகிநிற்கும் நீரின் வெம்மையை குறைத்துவிட்டால் அதன் வேகம் தணிந்து உள்ளே சுழித்துக் கொள்வதுபோல் அவளுடைய நம்பிக்கைகள் தளர்ந்து எண்ணப் பெரு நினைவுகள் சுழித்துக்கொண்டன. அந்த நிலையில் கழிந்து விட்ட காலத்தில் அடிச்சுவடுகள் அவள் எண்ணக் குகையை விட்டு நினைவு அலைகளாக மேலெழுந்தன.

எங்கெங்கோ பிறந்தார்கள். வேறுபட்ட சூழ் நிலைகளில் வளர்ந்தார்கள். வாழ்க்கையின் வேறுபட்ட

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

காந்தி நூற்றாண்டு விழாக் கட்டுரை:

# காந்தீயமும்

சர்வதேசிய நோக்கில் இன்று மாபெரும் சக்திகளாக மக்கள் உள்ளங்களை ஆட்கொண்டு விளங்கும் இரு பெருந் தத்துவங்கள் காந்தீயமும் கம்யூனிஸமுமாம். இத்தத்துவங்கள் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இருதுருவங்களாகத் தென்படினும், ஆழ்ந்து, ஆராய்ந்து பார்க்கும்போது இவற்றிடையே மிக நெருக்கமான, ஒற்றுமையுள்ளமையைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். ஆனால் நடைமுறையில் – அனுட்டிக்கும் வழிவகைகளில் இவை பெரிதும் வேறுபாடுள்ளனவாகத் தோன்றுகின்றன. காந்திஜீ நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடும் இச்சமயத்தில் காந்தீய தத்துவத்தைத் தரிசன நோக்கில் நாம் ஆராயும்போது அஃது மிக மிகவுயர்ந்த மேலான நாகரிகமும், இரக்கமும், பண்பாடும் நிறைந்த சமுதாயத்திடையே மலரக்கூடிய புனிதமான சக்தியென்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனாலும் இன்று – காந்திஜீயின் மறைவின்பின் — இத்தத்துவம் முற்றிலும் நடைமுறைச் சாத்தியமற்ற தோற்றத்தைப் பெற்றுள்ளதனை யாரும் மறுக்கமுடியாதுள்ளது. காந்திஜீயின் மறைவின்பின் — அவரது உத்தம சீடர்களான நேருஜீ, ராஜாஜீ, வினோபாஜீ, ஆகியோரது வாழ்நாளிலேயே காந்தீய தத்துவம் முழுக்க முழுக்க நடைமுறைச் சாத்தியமற்ற நிலையில் குற்றுயிரும், குலையுயிருமாக அல்லற்பட்டு வந்ததனையும் இன்றைய இந்திய அரசியல் நிலையில் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் கம்யூனிஸமோ அதனை வெறும் இலக்கிய, இலக்கண , உருவில் வடித்துத் தந்த கார்ல் மார்க்ஸின் மறைவுக்குப் பின்னரே அரசுயந்திரத்தைத் தன்மயமாக்கி உலகின் மூன்றிலொரு பாகத்

**நாவேந்தன்**

தைத் தன்வயமாக்கி ஜெயக்கொடிபறங்க நிற்பதனை நாங்கள் கண் கூடாகக் காண்கின்றோம் ரஷ்யாவில், சீனாவில், கிழக்கு ஜெர்மனியில், செக்கோசிலவிக்கியாவில், ருமேனியாவில், அல்பேனியாவில், மற்றும் சில நாடுகளிலும் கம்யூனிஸதத்துவம் அரசோச்சுகின்றது. இந்நாடுகளிடையே கருத்து முரண்பாடுகள் இல்லாமலில்லையெனினும், காந்தீயத்தத்துவத்தைப் பெயரளவிலேனும் கொண்டுள்ள இந்தியாவிலும் பார்க்க இந்நாடுகள் மிகவும் முன்னேறிய நிலையிலுள்ளன என்பதனை மறுக்க முடியாதுள்ளது.

இதனை அறிவுக் கண்கொண்டு பார்க்கும் யாரும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

எனவேதான் காந்தீய தத்துவம் அரசியல் நிலையிலிருந்தும் முன் சென்று, இன்று ஆன்மீக தத்துவமாக — சமயத்தோடிணைந்ததாக மாறியுள்ளது. இதனால் மனிதகுலத்தின் உடனடிப் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது என்பதனை நேருஜீயுட்படப் பலபாரதத் தலைவர்களே மறைமுகமாக ஒப்புக் கொள்ளநேர்ந்தது. சீனாவின் படையெடுப்பின் போதும், பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பின் போதும் காந்தீயதத்துவத்தின் கதியென்னவாயிற்று? பலாத்காரத்தை - ஆயுதபலாத்காரத்தை எப்படியோ மேற்கொள்ள வேண்டியே நேர்ந்தது. பீரங்கிகளையும், டாங்கிகளையும், போர் விமானங்களையும் பயன்படுத்தி எதிரிகளை ஒழிப்பதனை 'அகிம்சை' வழியென யாராலுமே சாதிக்கமுடியாது! எனவேதான், என்னைப் பொறுத்த அளவில் காந்தீய தத்துவம் மிகவுயர்ந்ததென்பதனை ஒப்புக் கொள்ளினும் கம்யூனிஸத்தின் மிகப் பழுத்த அறநிலையிலேதான் காந்தீயம் கனியமுடியும் எனச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதுவரை பலாத்காரமுறையில் 'அறநெறியை' நிலைநாட்ட வேண்டிய அவசியத்தை யாருங் குறை கூறவேமுடி

# கம்யூனிஸமும்!

யாது. கம்யூனிஸம் தனி மனித சுதந்திரத்தை சகல வழிகளிலும் கட்டுப்படுத்து கின்றது, தேசத்தின், சமுதாயத்தின் உலகத்தின் உய்யும் வழிகாரணமாக! அது போலவே காந்தீயமும் தனி மனித சுதந்திரத்தை மிகக் கடூரமாகக் கட்டுப்படுத்து கின்றது. உதாரணத்துக்கு வேண்டுமானால் ஒரு குடும்பத்தின் தலைவன் - தலைவிக் கிடையேயுள்ள 'அந்தரங்க உறவை'க்கூடக் காந்தீயம் கட்டுப்படுத்துகின்றது, 'சத்தியசோதனை' இதற்குச் சான்றுபகருகின்றது. இக் கட்டுப்படுத்தலில் இன்ப உணர்ச்சிக்கே இடமில்லை. சமுதாயத்தின் - தேசத்தின் ஆரோக்கியத்துக்காக சாதாரண மனித ஆசாபாசமே இங்கு கொடூரமாகப் பலியிடப்படுகின்றது. ஆனால் கம்யூனிஸத்தில் இக்கட்டுப் பாடு இவ்வளவு இறுக்கமாக இல்லை! இதனை உதாரணமாகக் கொண்டு பார்த்தாலே 'கட்டுப்பாடு' என்பது இருதத்துவங்களுக்கும் மிகக் கடினமாக அனுட்டிக்கப்படுதலை நாங் காண்கின்றோம் ஆனால் காந்தீயம் தனி மனித உணர்ச்சிக்கும் அறிவுக்கும் இடங் கொடுத்து 'மெல்ல மெல்ல' செயலாற்றப் புதிய உலகைப் படைக்க விழைகிறது. ஆனால் கம்யூனிசமோ சட்டரீதியாக, பலாத்கார அரசு யந்திரத்தைப் பயன் படுத்திக்கூட இக்கட்டுப் பாட்டினை அனுட்டிக்கத் தூண்டுகின்றது. இந்த 'மூல முழுப் பொருள்' விவகாரத்திலே தான் காந்திஜீயும், கார்ல் மார்க்சும் வேறுபட்டுநிற்கின்றனர். ஆனால் இன்றைய உலகசமுதாய, யதார்த்த நிலையில் காந்திஜீ பின் தங்கியவராகவும், கார்ல் மார்க்ஸ் முன்னேறியவராகவும் இருக்கின்றார்கள். அமெரிக்க நீக்ரோ மக்களின் உரிமைப் போராட்டமும், வியட்நாமிய மக்களின் விடுதலைப் போரும் இதனை ஐயந்திரிபற நிருபித்துள்ளன. 'சனநாய சோஷலிஸ' நாடுகளிலே சத்தியத்திற்காக — காந்திஜீயின் நெஞ்சார்ந்த லட்சியத்திற்காகப் பேராடுகின்ற குரல் மிகவும் பல வீனமடைந்து விட்டது. ஆதலாற்றான். காந்தீயமும் கம்யூனிஸமும் கலக்கின்ற ஜனநாயக கம்யூனிஸத்தின் மூலமே புதிய உலகைப் படைக்க முடியுமென யான் கருதுகின்றேன். காந்திஜீ நூற்றாண்டு விழா நடக்கும் இக்கால கட்டத்து மறைக்க - மறுக்க முடியா இவ்வுண்மையினைச் சுட்டிக் காட்டிக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.


## 'தமிழ்க்குரல்' பதிப்பகத்தின் தரமான வெளியீடுகள்!

1. வாழ்வு — ரூபா 2-50
   நாவேந்தன் எழுதிய சிறுகதைத் தொகுதி. சாகித்தியமண்டலப் பரிசுபெற்றது. பதினைந்து இனிய சிறுகதைகள் கொண்ட தொகுதி!
2. 'தெய்வமகன்' — நாவேந்தன் — ரூபா 2-00
   உயிர்த்துடிப்பு நிறைந்த, ஜீவன் மிக்க, உரைநடையிலமைந்த 'சிறுகதைத் தொகுதி. பலரதும் பாராட்டைப்பெற்றது.
3. 'சிலப்பதிகாரச் செந்நெறி' — நாவேந்தன் — விலை சதம் 25
   (சொற்பொழிவு)
   நாவேந்தன் நிகழ்த்திய சிறந்த சொற்பொழிவுகளில் ஒன்று. பலரதும் வேண்டுகோளுக்கிணங்க நூலுருவம் பெற்றுள்ளது.

**தமிழ்க்குரல் பதிப்பகம்**
ஏழாலை - வடக்கு,
சுன்னுகம்.

நினைவு விசாரங்களுடன் வாழ்ந்திருப்பார்கள். கல்வி என்ற ஒன்றுக்காகக் கல்லூரிக்கு வந்து சேர்ந்தவிடத்தில் கணேஷனைச் சந்தித்தாள் புனிதம்.

பெயரும் புனிதம், குணமும் புனிதம், அவள் செயல்களும் புனிதம். நித்தம் நூறுபொய் சொல்பவரெல்லாம் அரிச்சந்திரன் என்று 'உண்மையான' நாமத்தை தாங்கித்திரியும் இன்றைய உலகில் அவள் பெற்ருேர் வைத்த பெயருக்கு எந்த மாசும் ஏற்படாவண்ணம் நடந்துகொண்டாள் புனிதம். அவள் அழகும், குணமும், பண்பும் யாரையும் கவரும் சக்தி பெற்றிருந்த தென்னவோ உண்மைதான். கணேஷ் அவளைப் பார்க்கும் போதெல்லாம் அவள் இதழ்கள் முறுவலிக்கும். அந்த முறுவலின் நினைவே சொர்க்கத்தின் கதவுகளாகத் தெரியும் அவனுக்கு.

காலத்தின் சுழற்சி நெருக்கமான பழக்கத்தின் வளர்ச்சி. உடலாலும், உணர்வுகளாலும் வேறுபட்ட இருவரையும் தடுமாறவைத்துக் கொண்டிருந்தன, கணேஷனுடைய உள்ளத்தில் புனிதமே தெய்வமாக நின்ருள். அவன் மனக்கோயிலில் வழிபடும் தெய்வமாகிவிட்ட புனிதத்துக்கும் அந்த ஆசை நிறைய இருந்தது. ஆனுல் சமூகத்தில் இருக்கும் அந்தஸ்து பேதம் ஆசைகள் நிறைந்த மனதில் அரிவாள் கொண்டறுக்கும். அக்கணமே ஆசைகளை நிலைநிறுத்தி சமாதி கட்டி விடுவாள்.

கணேஷ் பணக்கார வீட்டுப் பையன். பணத்துக்கும் – பண்புக்கும் வெகு தூரம் இடைவெளி உண்டென்பதே பொது நோக்கமாயினும் கணேஷனைப் பொறுத்தளவில் பணத்துக்கு முன்னே பண்புதான் நின்றுகொள்ளும். அவனைத்தான் கணவனுக அடையக் குறுக்கே நிற்கும் அந்தஸ்து பேதங்களைக் கண்டஞ்சிய புனிதத்தின் உள்ளம் புனிதமாகத்தான் இருந்தது. ஆனுல் வேதனைகள்- சோதனைகள் – கலக்கங்கள். புயலிலே கொடியிலாடும் புனிதமான மலரானுள் புனிதம். இத்தனைக்கும் அவள் இதயம் கலங்கினுளில்லை. ஆனுல் அவனைத் தன் கணவனுக்கிக் கொள்ள தன் பெற்ருேர் விரும்பார் என எண்ணினுள், குமைந்தாள்.

பழமையில் ஊறிப் போன அவள் பெற்ருேர் பாரம்பரிய ஆசார கட்டுக்கோப்புகளுக்கு அப்பால் புனிதத்தின் இதய உறவை விஸ்தரிக்க விரும்பவில்லை. பெற்ருேரை மீறும், தன் ஆசார ஒழுக்கங்களை மீறும் துணிவு அந்தப் பேதைக்கு அன்று இல்லாமல் போய் விட்டது. அதனுல் தன் இதயத்தில் சுரந்த இனிய உறவை கல்லாக்கிக் கொண்டாள்.

புனிதமான நினைவுகளுடன், புனிதமான தன் காதலைத் தெரிவித்து அவளைத் தன் மனைவியாக ஏற்றுக் கொள்ளச் சம்மதமளித்ததான் கணேஷ். ஆனுல் புனிதம்...? ''கணேஷ்! நான் உங்களை அந்த ஸ்தானத்தில் என்றுமே வைத்துப் பார்த்ததில்லை. உங்களோடு வைத்த உறவு தூய உறவாகவே என்றும் போல இன்றும் — என்றும் இருக்கட்டும்'' என்ருள் உள்ளத்துள்ளிருக்கும் உணர்வுகளை ஒளித்தவளாய்.

திகைத்துவிட்டான் கணேஷ். அவனுக்கு என்ன பேசுவதென்றே தோன்றவில்லை. அவன் மனதில் மட்டுந்தானு அத்தகைய பாலுணர்வுகள் தோன்றின......: அவள் தூய உறவு என்பது எதை? இனிக்க இனிக்க பேசி— இனிய நினைவுகளோடு உறவாடியதெல்லாம்...... ஒரு வேளை சகோதர பாசத்துடன் தானே...? பேச முடியாது...... உணர்ச்சி வேகப்பட்டு தடுமாறும் அவனைப் பாராமலே கணேஷ் என்ருள்.

"என்ன புனிதம்?"

''என்னுடன் கோபமில்லையே''

''இல்லை, இல்லை. புனிதம் வாழ்க்கையில் யார் யாரையோ சந்திக்கின்ருேம். பிரிகின்ருேம். ஆனுல் சந்திப்பவர்கள் எல்லாம் நினைவில் நிலைத்து நிற்பதில்லை. உங்களைக் கண்டபோதே என் உள்ளத்தில் உதயமான இனிய நினைவுகளால் கோயில் எழுப்பி உன்னைத் தெய்வமாகப் பூசிக்கின்றேன் புனிதம்.'' ''அந்தப்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

பாக்கியம் எனக்கில்லை கணேஷ். நான் சாதாரண மானவள். நீங்கள் நல்லவர்-நற் பண்புள்ளவர், என்னை...'', ''புனிதம்'' என்று இடைமறித்தான் கணேஷ். காதளவோடிய அகன்ற விழிகளில் நீர் தேங்கி நிற்க, தலையை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் புனிதம்.

அந்த முகத்தில் என்றும் மலர்ந்து அவளைப் பரவசத்திலாழ்த்தும் குறுநகை. கண்களிலே ஒரு புத்தொளி. ஏமாற்றம் என்பதைச் சிறிதும் பிரதிபலிக்காத சலனமற்ற தெளிவு நிறைந்திருந்ததைக் கண்டாள் புனிதம் ''புனிதம்-இன்று முதல் என் நினைவுகளை மாற்றிக்கொள்கிறேன். என்னுள்ளத்தினுள் உள்ள புனிதத்துடனே வாழ்ந்து விடுகின்றேன். உன்னை இனி அப்படி நினைக்கேன். இது உறுதி புனிதம்.''

''என்னிலும் பார்க்க சகலதிலும் மேம்பட்ட ஒருத்தி உங்களுக்குக்கிடைப்பாள் கணேஷ்''

''அது யோசிக்கவேண்டிய விடயம், என் விடயம். உங்களைத் தவருக எண்ணியதற்கு என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் இப்படியான கேவலமான ஆசைகள் என்னுள்ளத்தில் தோன்ருது'' என்று கூறிவிட்டுச் சென்ருன். அவள் விழியினின்றும் அவன் உருவம் மறைந்துவிட்டாலும் உள்ளத்தில் நிறைந்த அவன் உருவம்...?

கல்யாணமான பின்பும் புனிதத்தின் நினைவினின்றும் அவனை நீக்க முடியவில்லை. அவனை நீக்கிவிட அவள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அத்தனையும் படுதோல்வியாகவே முடிந்துவிட்டன ஆனல் கணேஷன்?

அவன் வாழ்ந்தான்-உயிரைப்பதுக்க ஓர் உடல் அந்த உடலைப் பாதுகாக்க உணவு உணவைச்சேகரிக்க உழைப்பு. இதற்காக வெளிவேடங்கள். இத்தனையும் அவன் உயிருடன் வாழ வேண்டும் என்பதற்காகவேயன்றி வாழ்க்கையில் ஏற்பட்ட பிடிப்பினுல் அல்ல. என்று புனிதத்துக்குச் சத்தியம் செய்து கொடுத்தானே அன்று முதல் தன் புலனின்ப உணர்வுகளை அடக்கப் பழகிக் கொண்டான். வாழ்க்கை அவனுக்கு ஒரு செருகல். அவனுக்கென்று நல்லது-கெட்டது, இன்பம்–துன்பம். அது–இது என்ற எல்லைகள் இல்லாத ஓர் அபேதவாதியாகி விட்டான்.

வாழ்க்கையை முறையாகப் புரிந்து கொண்டு அதன் பொய்யான மயக்கத்துக்குத் தன்னை ஆட்படுத்தாமல் மனிதனைத் துன்பத்திலாழ்த்தும் ஆசாபாசங்களைத் துறந்த நிலையில் பலருக்கும் பிரயோசனப்படும் ஒரு டாக்டராகப் பலரும் மதித்து வரவேற்கும் லட்சிய புருடனுக வாழ்ந்தான் கணேஷ்.

காலம் பதித்த சுவடு வயது முப்பத்தி எட்டை எட்டிப் பிடித்துவிட்டது. ஒரு நாள் மாலை கையில் ஏந்திய குழந்தையுடன் காரைவிட்டிறங்கி நர்ஸிங் கோமில் நுழைந்த புனிதத்தை அன்புடன் வரவேற்ருன் கணேஷ். கணேஷ் தான் டாக்டர் என்பதை அறியாத புனிதம் திகைத்துவிட்டாள். அவள் கண் முன்னே இளமையின் கொலு மாருத கணேஷ் களை சொட்டும் முகத்துடன் குறுநகையோடு வீற்றிருந்தான்.

''டாக்டர், இவன் என் மகன். பெயர் என்ன தெரியுமா?'' ''எனக்கு எப்படித் தெரியும். சொன்னுல் தெரிந்து கொள்கிறேன்'' என்ருன் குறும்பாக. அவன் கண்களில் குறும்பு மின்னலிட்டது.

''இன்னும் பழைய கணேஷாகத்தான் இருக்கின்றீர்கள். இவன் பெயர் கூட கணேஷ்தான்'' அவள் விழிகள் பனித்தன. நீர் பனித்தவிழிகளைத் துடைத்தவாறே ''கடவுள் எம்மை அந்தஸ்து பேதமின்றிப் படைத்திருந்தால் எமது வாழ்க்கை...''

''புனிதம், நடந்தது என்னவோ நடந்துவிட்டது. மக்களின் தரத்திற்கு ஏற்ப நம்பிக்கைகளும் பேதப்படுகின்றன. மானுடம் தனக்குத் தானுக வகுத்துக் கொள்ளும், ஆசாரப் பொய்யணிகள்தாம் வாழ்க்கையாகத் தென்படுகின்றன; ஆசையும், கற்பனையும், கனவும், பிடிப்பும் மனித வாழ்க்கையின் தரத்திற்கு அடங்கி

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# நாவேந்தன் சிந்தனைகள்.....!

சமயம் என்பது ஆத்மாவைப் புனிதப்படுத்துஞ் சாதனமாக வேண்டும். தனிமனித, சமுதாய உலகாயதத் தேவைகளுக்கு மட்டும் வலிந்து ஆதரவு தேடுபவர்களுக்கு வலுவளிக்குஞ் சாதனமாக அஃது ஒரு போதுமே அமையக்கூடாது.

⚜

நான் சைவ சமயத்தவனு, கிறிஸ்தவனு அல்லது வேறேதும் மதப்பிரிவைச் சேர்ந்தவனு என்று அறிவதில் அக்கறை காட்டுபவர்களைக் காண மிகவும்விசனிக்கிறேன். நான் எந்த மதப் பிரிவுக்குள்ளும் என்னைச் சிறைவைக்க விரும்பவில்லை. கடவுள் ஒருவர் இருக்கிறுர் என்ற பூரணமான நம்பிக்கையே எனது சமயமாகும்.

⚜

பெண்மைக்கு பெருமதிப்புச் செய்யும் பண்பாட்டில் ஊறியவர்கள் தாம் பாரத மக்களும் நாமும், ஆனுல் இன்று அந்த மதிப்புக்குரிய நிலையில்-வணங்கத்தக்க நிலையில் பெண்மை இல்லை! கண்ணகியையும், மாதவியையும், சாவித்திரியையும் இலக்கியப் பாத்திரங்களாகவே காணலாம். யதார்த்த வாழ்வில் காணவே முடியவில்லை. கேவலம், மிகமிகக் குறைந்த ஒரு தொகைக்கு கிடைக்கக்கூடிய தனை மகா வணங்கத்தக்க தெய்வசக்தி என்று ஒரு போதுமே நான் கருதப் போவதில்லை.

⚜

மேலைநாட்டுப் பெண்களின் வீரம் எமது பெண்களிடமில்லை. கீழைநாட்டு மகளிரின் மனமோகனக்கலைகளும் நமது பெண்களிடமில்லை. மேற்கும் கிழக்கும் வீரத்திலும் கலையிலும் மேம்பட்டு நிற்க, நமது பெண்கள் 'உண்டிருந்து வாழ்தற்கே' என்னவெல்லாமோ செய்து உழல்கின்றுர்கள்!

⚜

சனநாயகம், பணநாயகத்தின் பின்னே சாமரை வீசுகின்றது. இன்றுள்ள 'மக்கள் பிரதிநிதிகள்' எனப்படுவோர் உண்மையில் பணநாயகத்தின் பிரதிநிதிகளே தவிர வெகு ஜனங்களது பிரதிநிதிகளல்லர். வாழ்நாளில் பசியையும், வறுமையையும் அனுபவித்திராதவன், அனுபவிக்கின்றவர்களையே பார்க்க முடியாதவன் உண்மையில் அவர்களுக்கு எப்படிச்சேவை செய்கின்றவனுக முடியும்?

⚜

இலக்கிய உலகில் பட்டங்களைச் சூட்டிக்கொண்டு தவிக்கின்றவர்களைப் பார்த்து நான் மிகவும் அனுதாபப்படுகிறேன். உண்மையில் அந்தப்பட்டங்களுக்குள்ள வேதனையை அறிந்த பிறகாவது அவர்கள் அவைக்கேற்பத் தமது தகுதியைவளர்த்துக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறுர்களே!

⚜

காதல் என்பது ஒரு பொய், கானல் நீர், சூன்யம்! இதனைப்போய் தெய்வீக சக்திவாய்ந்தது என்று புகழ்பவர்கள் வெறும் ஏமாற்றுக்காரர்களாகவோ, அல்லது பைத்தியக்காரர்களாகவோ தான் இருக்க வேண்டும். சாதாரண ஒரு மயக்கத்தைக் காதல் என்றுல் அதிலே என்னதெய்வீகமுண்டு? புதிய ஆடை, கார், நகைகள் இவற்றிலே மயங்குவது போலத்தான், ஆண் பெண் மயக்கமும்! இது ஒரு நீர்க்குமிழி. தெய்வீக சக்தி வாய்ந்ததல்ல.

⚜

பிறனெருவன் எதனைச் செய்யக் கூடாதென்று குற்றஞ் சுமத்த விழைகிறுர்களோ அதனையே நாளும் பொழுதுஞ் செய்து கொண்டிருப்பவர்கள் இன்றைய சமுதாய அமைப்பில் பெரிய மனிதர்கள், ஒழுக்க சீலர்கள், சட்டதிட்டங்களை உருவாக்குபவர்கள்! இவர்களிடமிருந்து கருணையை எதிர்பார்ப்பதனைவிடச் சுடுமணலிலிருந்து சுகந்தமான நீரை எதிர்பார்ப்பது எளிதானது!

⚜

இறைவா, இறக்குந்தனைக்கும் நான் நின்னை நினைக்கவும், இலக்கிய இன்பங்களை நுகரவும், அவற்றை எழுத்தில் படைக்கவும், அழகிய கனவுகளில் மூழ்கி எல்லையில்லாத இன்பக் களிப்பில் திளைத்திருக்கவும் வல்ல உடல், உளவல்லமைகளை எனக்கு அருளுவாயாக!

⚜

வாழ்க்கை என்பதே ஒரு பயணந்தான். எத்தனையோ கட்டங்கள் இடையே' ஆனுல் சில சம்பவங்களை இறப்புக்குப் பின்னுமே மறக்கமுடியாது போலல்லவா இருக்கிறது? ஒரு சில விஞடிகளுமே இடம்பெற்றிராத இச்சம்பவங்கள் எப்படித்தான் இறவா வரம் பெறுகின்றனவோ!

## தமிழ் உரை......

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் உரைநடைக்குத் தந்தையான நாவலர்காலத்திலிருந்து, நாவலாசிரியரான நா. பார்த்தசாரதியினுடைய இக்காலம் வரையும் நாம் எமது கண்ணோட்டத்தைச் செலுத்தினால் 'வசனநடையின் பெருமைப்படத்தக்க வளர்ச்சியை ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

தமிழ் உரைநடைக்கு—அதன் வளர்ச்சிக்கு, பலப்பல எழுத்தாளர்கள் பல்லாற்றானும் உதவி இருக்கின்றனர். அவர்களில் முதன்நிலை பெற்ற உரைநடை மன்னர்களையும், அவர்களின் நடைநயத்தையுஞ் சற்று பார்ப்போம்.

**சுப்ரமண்ய பாரதி**

மஹாகவி சுப்ரமண்ய பாரதியும் உரைநடை வளர்ச்சிக்கு உதவியவரா, என்ற சந்தேகம் நிச்சயமாக அவரது மோஹனமான வசன நூல்களைப் படித்தவர்களுக்கு வராது, பாரதியின் உரைநடை அவருடைய ஈடற்ற கவிதைகளைப் போலவே சுவையும், வேகமும் மிக்கனவாகும். "ஞானரதம்" நூலில் பாரதி கையாண்ட நடையொன்றே அவருடைய வசன காம்பீர்யத்திற்கு ஏற்றதோர் எடுத்துக்காட்டாகும்'-

**மறைமலையடிகள்**

'தமிழ் தனித்து நிற்க வல்லது' என்ற கூற்றை அடிகளார் மெய்ப்பிக்கத் தொடங்கிய கணத்திருந்தே கலையம்சம் அவருடைய எழுத்தைவிட்டு ஓட்டம் பிடித்துவிட்டது. எனினும் மொழித்தூய்மை, பொருட் சிறப்பு போன்றன அவர் உரைநடையிற் காணப்படுவதால் அடிகளார் தமிழ்உரை நடைக்குத் தகுதிவாய்ந்த—தனித்துவம் வாய்ந்த முன்னோடியாகவே மதிக்கப்படுகிறார்.

(அடுத்த இதழில் மீதி)

## உறவுக்......

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ஒடுங்கிவிட முடியுமா என்ன? மானுடங்களின் பலவீனங்கள் இப்படி ஏதாவது லட்சியங்களைக் கொன்றுவிடுகின்றன. கடவுள் இதற்குப் பொறுப்பாகமுடியுமா?''

''அப்படியாயின் நீங்கள்......?

''நான் கணவன் மனைவி என்ற உறவுக்கப்பால் ஒருத்தியுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். அந்த வாழ்வு என்னைப் பொறுத்தளவில் நான் ஒரு சம்சாரி என்பதை உறுதிப்படுத்துகிறது'' சிரித்துக்கொண்டே கூறிய கணேஷனின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள் புனிதம்.

ஒருத்தியுடன் வாழ்க்கை நடத்துபவன் சம்சாரியானால் ஒருத்தியின் நினைவில் அமிழ்ந்து வாழ்பவனும் சம்சாரிதானே! என்ற உண்மையொளி துலங்கும் அவன் தூய்மை நிறைந்த விழிகளினூடே அவன் உள்ளத்துள் வாழும் புனிதம் பளிச்சிட்டு மின்னியது.

(யாவுங் கற்பனையே)

"NAVENTHAN"
ADVERTISEMENT TARIFF

★

**BACK COVER PAGE**

| | |
|---|---|
| Double Colour | Rs. 150 |

**IN SIDE COVER PAGE**

| | |
|---|---|
| Double Colour | Rs. 110 |
| Single Colour | Rs. 100 |

**CASUAL RATES**

| | |
|---|---|
| Full Page | Rs. 100 |
| Half Page | Rs. 50 |
| Quarter Page | Rs. 25 |

**CONTRACT RATES**

| | |
|---|---|
| Full Page | Rs. 80 |
| Half Page | Rs 40 |
| Quarter Page | Rs. 20 |

★

Contact for other particuiars,

"NAVENTHAN"
Earlalai North,
CHUNNAKAM.

**நாவேந்தன்**
இலக்கியத் திங்கள் இதழ்

தனிப்பிரதி சதம் -/25
வருட சந்தா ரூபா 3/-

வருட சந்தாவுக்குக் குறைய ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

— நாவேந்தன்
மலரகம்
ஏழாலை வடக்கு,
சுன்னாகம்.

# "நாவேந்தன்" வெளியீட்டு விழா!

செப்டம்பர் முதலாம் நாள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் புனிதமான மகத்தான பொன்னுளாகும். இந்த நாட்டின் இலக்கியப் பிரம்மாக்களிடையே அதிதிறனும், துணிவும் கொண்ட ஒரு எழுத்தாளர், தமது பெயரிலேயே ஒரு இலக்கிய சஞ்சிகையை, சகல இலக்கிய அரசியற் போக்குக் குரோதங்களையெல்லாம் வென்று, வெளியிட்ட அற்புதத்தை நாடுகண்டது, நானுங் கண்டேன். அரசியல், இலக்கியம் மற்றும் இயக்கங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு துருவங்களாக விளங்கிய பிரமுகர்கள், அரசியல் வாதிகள், எழுத்தாளர்கள், தொழிலதிபர்கள் அனைவரும் ''நாவேந்தன்'' இலக்கியத் திங்கள் இதழ் வெளியீட்டு விழாவில் நூற்றுக் கணக்கில் குழுமியிருந்தனர். யாழ். மலாயாகபே மேல்மாடி நிரம்பி வழிந்தது.

சிறந்த சமய, இலக்கியச் சிந்தனையாளர், எண்பது வயது இளைஞர், அறநெறிக் காவலர் முதலியார் சி. முத்துத்தம்பி தலைமை வகித்தார். கொடைவள்ளல் பரம்பரையின் குலக் கொடியாக விளங்குகின்ற கனகசபை கைலைநாதன் ஜே. பி. மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். முதலியாரவர்கள் அழகுதமிழில் தமது தலைமையுரையில் ''எழுத்தாளர்கள், பத்திரிகைகள் பற்றி ஆணித்தரமான கருத்துக்களைத் தெரிவித்துவிட்டு திரு. நாவேந்தன் தலைசிறந்த எழுத்தாளர், பேச்சாளர், பத்திரிகையாசிரியராந்தகுதி மிக்கார்'' என்பதனை நயம்பட விளக்கினுர்.

''நாவேந்தன்'' இலக்கியத் திங்கள் இதழ் வெளியீட்டுரையை ஏழாலை அரசினர் மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். அம்பலவாணர் பீ. ஏ நிகழ்த்தினுர்.

பத்திரிகையின் முதற் பிரதியை சிறந்த கலா இலக்கிய ரசிகரும், வழக்கறிஞருமான திரு. தா. சங்கரப்பிள்ளை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அவரைத் தொடர்ந்து திருவாளர்கள் கனகசபை கைலைநாதன் ஜே பி, எஸ். அம்பலவாணர் பீ. ஏ, த. சிவலிங்கம் ஜே.பி, எஸ். செல்வரத்தினம் B. Sc தையல்நாயகி அதிபர் எஸ். நடராசா, எஸ். மயில்வாகனம், துரை, மனேகரன், முதலியார் சி. முத்துத்தம்பி வி. சோமசுந்தரம் பீ. ஏ, கே. ஐ. தேவதாசன். ஏ எஸ். நடராசா, என். ரி. சிவஞானம், வி. நாகரத்தினம் வி. பொன்னுச்சாமி, ஆகியோருட்பட மற்றும் பலர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

இலக்கிய ரீதியாக வெவ்வேறு கோணங்களில் நின்று ஆய்வுரையும், வாழ்த்துரையும் வழங்கினுர்கள். திருவாளர்கள் வி. பொன்னம்பலம் எம். ஏ. வித்துவான் க. சொக்கலிங்கம், புதுமைலோலன், என். ரி. சிவஞானம் ஆகியோர்.

ஆசிரியர் நாவேந்தன் அடக்கமாகவும், தனக்கேயுரியதான கம்பீரத்துடனும் நன்றியுரை நவின்ருர்.

தனியொரு எழுத்தாளனே – ஒரு இயக்கமாக ஒரு இலக்கிய சஞ்சிகையாகப் பரிணமித்து – அதன் வெளியீட்டுவிழாவில் பூரணத்துவமான வெற்றிபெற்றதனை இந்த விழாவிலே மிகத் துல்லியமாக நான் தெரிந்துகொண்டேன். உண்மையில் நாவேந்தன் ஒரு அற்புதமான மனிதர்தாம்! சிலருக்கு அவர் 'ஒரு புதிர்' ஆகப் புரிவதன் காரணமும் இதுவேதான் என்று நான் நிச்சயஞ் செய்துகொண்டேன்.

— ''கைலாஸ்''


O ஆடவருக்கு
அழகும், கம்பீரமும் தரும்
வேட்டிகள், சால்வைகள்

★

O மகளிர்
மனங் குளிரச் செய்யும்
மகத்தான புடைவைத்
தினுசுகள்
பற்பல வண்ணங்களில்
கிடைக்கும்!

O விபரங்களுக்கு:-
நிர்வாகி.
**சக்தி பவர் லூம்ஸ்**
குரும்பசிட்டி,
**தெல்லிப்பழை.**

## முத்தமிழ் வித்தகர்!

ஈழத்தமிழகத்தின் சமய, இலக்கியப் பண்பாட்டினை இமயம் வரை உயர்த்திய பெருமைக்குரியவர் முத்தமிழ் வித்தகரான சுவாமி விபுலானந்தர். கிழக்கு மாகாணத்தின் தென்பாலுள்ள காரைதீவு என்னும் ஊரின்கண்ணே, சைவமும் தமிழும் தழைத்தோங்குஞ் சால்பு படைத்த பெருங் குடியிலே, அருந்தவப் புதல்வராக அவதரித்தவர். இளமையிலேயே தமிழும், ஆங்கிலமும், வடமொழியும் துறைபோகக் கற்றுப் புலமையெய்தியவர். ஈழத் தமிழன்புகழை இமயம் மட்டும் நிலைநாட்டிய பெற்றியர். தமிழ்ப்புலமையும், சமயப் பற்றும், மற்றும் மொழியாய்வும் மிக்க அம்மூதறிஞர் இந்தியாவிலும், இலங்கையிலும் ஆசிரியராய், எழுத்தாளராய், பல்கலைக் கழகப் பேராசிரியராய், துறவியாய் மிளிர்ந்து ஆற்றிய தொண்டுகள் அளப்பில. ஆறுமுகநாவலரின் பின்னே சுவாமி விபுலானந்தரே தமிழுக்கும் சைவத்துக்கும் பெருந்தொண்டாற்றிய பெரியாராவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இலங்கைப் பல்கலைக் கழகம் என்பவற்றிலே அன்னார் தமிழ்த்துறைத் தலைவராய் விளங்கினார்கள்.

முத்தமிழ் வித்தகரான விபுலாநந்தர் ஆராய்ச்சியிலும் மிகப் பேரறிஞர். விஞ்ஞானப் புலமைமிக்கவர். இசைத் தமிழாராய்ச்சியின் பேறாக அவர்கண்டு அளித்த யாழ் நூல், இதற்குச் சான்றுபகரும். யாழ் நூலாய்வினை சுவாமிகளுக்கு இணையாகச் செய்தவரோ, செய்யக் கூடியவரோ எவரு மிலர். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலருக்கே எளிதில் உய்த்துணர முடியாத பேருண்மைகளைக் கொண்டது அவர் தம் உரை நடை. பல நூல்களை அவர் ஆக்கியுள்ளார். மொழிப்பற்றும், இனப்பற்றும் துறக்க முடியாத துறவி அவர். ஈழத் தமிழர் தவக்கொழுந்தாக மிளிர்ந்த அவர் அமரராகியது — எவரும் எதிர்பார்க்கக் கூடாத நடுத்தரவயதிலே—என்றால், அஃது எமது தவக்குறைவென்றே சாற்றவேண்டும்! 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையுந் தெய்வத்துள்' கலந்துவிட்ட சுவாமிகளின் உருவச் சிலைநாட்டு வைபவம் இத்திங்கள் எட்டாம் நாள்—அவர் பிறந்த ஊராகிய காரைதீவிலே வெகு விமரிசையாக நடைபெற்றன. முத்தமிழ் விழாவாக முகிழ்த்தது. இவ் விழாக் கண்டு ஈழத்தமிழினமும், உலகத் தமிழர் சமுதாயமுமே இறும்பூதெய்துகின்றன. சுவாமிகள் திருநாமம் தமிழுள்ளளவும் நீடு நிலைக்கும்! தமிழினம் புதுவிழிப்புப் பெற்றுவிட்டது. தமிழ்த் தொண்டாற்றிய சான்றோர்களை என்றுமே போற்றிப் பாராட்ட வேண்டியதுதான். அதற்கு முதற்படியாக நாவலர்பிரானுக்கும் சுவாமி விபுலானந்தருக்கும் ஈழத்தமிழ் மக்கள் சிலை வடித்து அவர்கள் அழியாப் புகழுக்கு நிலைபேறான உருவம் கொடுத்துள்ளார்கள். ஞானமகான்களாகிய இவர்களது பேரருள் தமிழினத்திற்கு நல்ல எதிர்காலத்தை நல்குமாக!

★

## புரட்சித் துறவி!

குன்றக்குடி மடாதிபதியும், தமிழக மேல்சபை உறுப்பினருமான தவப் பெருந் திரு. குன்றக்குடி அடிகளாரின் இலங்கை விஜயம் ஒரு பிரச்சனையாக வட பகுதியைப் பொறுத்தவரை பரிணமித்துவிட்டது. தீண்டாமை ஒழிப்பு, தமிழில் அருச்சனை என்னும் விடயங்களில் அடிகளாரின் கருத்துக்களுக்கு நாம் மாறில்லையெனினும், ஒரு விருந்தினராக பிறநாடொன்றில் காந்தி நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் பேசுதற்கு வருகை தந்த அடிகளார் 'சத்தியாக்கிரகம்' உணவு உண்ணமாட்டேன், பால் பருக மாட்டேன் என்றெல்லாம் 'சிறுபிள்ளைத்தனமாக' பிடிவாதஞ் செய்தது பலரையும் வியப்புக்குள்ளாக்கிவிட்டது! அதே வேளையில் யாழ்ப்பாணத்தின் காலகாலமான வைதீக, சமூக, கட்டுப்பெட்டி மனப்பான்மையை அடிகளார் காரசாரமாகக் கண்டித்தார். அதனை நாம் வரவேற்கிறோம்! குன்றக்குடி அடிகளார் உண்மையிலேயே ஒரு புரட்சித் துறவிதான்!

—திருநாவுக்கரசு

கல்வி அமைச்சு வெளியிட்ட
பாட நூல்களின்
வழிகாட்டியைத் தழுவி

* சரித்திரம், * சைவசமயம்,
* பொற்காலப்புவியியல்,
* விவசாயம்.

ஆகிய நூல்கள்

மூன்று பருவங்களுக்கும் ஏற்றதாக
VI, VII, VIII வகுப்புகளுக்கு
வெளிவருகின்றன.

**கலைவாணி புத்தக நிலையம்**

யாழ்ப்பாணம் — கண்டி
தொலைபேசி: 221 - 7196

உங்கள் அச்சுவேலைகள்

★ தமிழ்
★ சிங்களம்
★ ஆங்கிலம்
★ சம்ஸ்கிருதம்

என்னும் மொழிகளில்

குறித்த நேரத்தில்
நியாயமான செலவிற் செய்விக்க

**ஆசீர்வாதம் அச்சகம்**

32, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்
தொலைபேசி: 274.

அழகும் பிரகாசமும் உழைக்குந் திறனும்
ஒருங்கே அமையப் பெற்றவை

**யாழ் - மார்க்** அலுமினியப் பாத்திரங்கள்.

யாழ் மெட்டல் இன்டஸ்றீஸ்,
250, 252, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.

**YARL METAL INDUSTRIES,**

**250, 252, K. K. S. Road, JAFFNA**

T' phone: 7049.


ஆசிரியரும் வெளியிடுபவரும் திரு. ரி. எஸ். ஆனந்தன் ''மலரகம்'' ஏழாலை வடக்கு, சுன்னாகம்.
அச்சிட்டவர் பிரம்மஸ்ரீ. சி. கனகசபாபதி ஐயர் அவர்கள், கலாதேவி, அச்சகம், சுன்னாகம்.
அச்சிட்ட திகதி 10-10-69 J 1519 / 69